**பிப்ரவரி – 21**

# TNPSC துளிகள்

- IFFCO இந்திய வெகுஜனத் தொடர்பு நிறுவனத்தின் முன்னாள் உறுப்பினர்களுக்கான அமைப்பின் (IFFCO Indian Institute of Mass Communication Alumni Association - IIMCAA) சிறப்புக் குறிப்பீட்டு விருதை பொருளாதார மற்றும் வணிக அறிக்கைப் பிரிவில் “தி இந்துவின்” பெருநிறுவன பதிப்பாசிரியரான பியூஷ் பாண்டே வென்றுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## DRIP - தமிழ்நாடு

- தமிழ்நாடு அரசானது அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (DRIP – Dam Rehabilitation and Improvement Project) பணிகளை மேற்கொள்ள உலக வங்கியிடமிருந்து ரூ.1,064 கோடியிலான நிதியை எதிர்பார்க்கிறது.
- இத்திட்டத்தின் நோக்கம் மாநிலத்தில் தற்பொழுதுள்ள அணைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதும் மாநிலத்தில் உள்ள அணைப் பாதுகாப்பிற்கான நிறுவன வழிமுறைகளானது அணைக் கட்டமைப்புகளை கையாள வலுவுடன் இருப்பதை உறுதி செய்வதும் ஆகும்.
- தமிழ்நாடு பொதுப் பணித்துறை மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆகியவை இணைந்து DRIP-ன் நிலை II மற்றும் நிலை III-ன் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 59 அணைகளைப் புனரமைப்பதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பித்துள்ளது.




**Dam Rehabilitation & Improvement Project mission identified Kerala, Odisha, Madhya Pradesh & Tamil Nadu in 2008 for work**

- The phase I of DRIP, which commenced in 2012, is being executed at ₹745.49cr covering 69 PWD dams and 20 Tangedco dams. Deadline is March 2020
- The phase II & III of the project estimated at ₹1,064cr, covering 37 PWD dams and 22 Tangedco dams. Duration set is 10 years
- **Dam failures are caused by age, deficiency in construction, inadequate maintenance, extreme weather or seismic event, wrong operation**

## ஸ்டெர்லைட் பிரச்சனை

- வேதாந்தா குழுமத்தின் ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை இயங்குவதை அனுமதிக்கும் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் ஆணையை இந்திய உச்ச நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.
- இந்த வகையான ஒரு ஆணையைப் பிறப்பிக்கும் அதிகாரம் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்திற்கு இல்லை என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- டிசம்பர் 15 அன்று தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது மூன்று வாரங்களுக்குள் ஆலையின் செயல்பாடுகளை அனுமதிப்பதற்கான ஒரு புதிய ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு (TNPCB - Tamil Nadu Pollution Control Board) உத்தரவிட்டிருந்தது.
- 2018 ஆம் ஆண்டு மே 28 ஆம் தேதி முதல் ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை மூடப்பட்டு இருக்கின்றது.

## வீரமரணமடைந்த சிஆர்பிஎப் வீரர்களின் கடன் தள்ளுபடி

- புல்வாமா தீவிரவாதத் தாக்குதலில் வீரமரணமடைந்த வீரர்களில் 23 வீரர்களால் பெறப்பட்டுள்ள அனைத்து விதமான செலுத்தப்படாத மீதமுள்ள கடன்களையும் தள்ளுபடி செய்யவிருப்பதாக பாரத ஸ்டேட் வங்கி அறிவித்துள்ளது.
- புல்வாமா தாக்குதலில் மரணமடைந்த வீரர்களின் குடும்பங்களுக்கு காப்பீட்டுத் தொகையாக தலா ரூ.30 இலட்சம் வழங்கப்படும் என்று அந்த அரசுடைமை வங்கி தெரிவித்துள்ளது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## பிராம்பிள் கே மெலோமைஸ் (பெரிய எலி போன்ற உயிரினம்)

- ஆஸ்திரேலியா அரசானது பெருந்தடுப்புப் பவளப்பாறைகளைக் (Great Barrier Reef) கொறித்து வாழும் உயிரினமான பெரிய எலி போன்ற உயிரினமான பிராம்பிள் கே மெலோமைஸ் என்ற இனம் முற்றிலும் அழிந்து விட்டதாக அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது. மனித இனத்தால் ஏற்படுத்தப்பட்ட காலநிலை மாற்றத்தால் அழிந்து போன முதலாவது பாலூட்டியாக இது ஆகியுள்ளது.
- எலி போன்ற உயிரினமான பிராம்பிள் கே மெலோமைஸ் கடந்த பத்து வருடங்களில் அப்பகுதியில் காணப்படவில்லை.



- இந்த பெருந்தடுப்புப் பவளப் பாறைகளைக் கொறித்து வாழும் உயிரினமானது பப்புவா நியூ கினியாவின் கடற்கரையோரத்தில் டோரிஸ் ஜலசந்தியில் உள்ள சிறிய சாண்டி தீவில் தனியாக வாழ்ந்து வந்தது.




- 2009 ஆம் ஆண்டு முதல் இந்த உயிரினம் இங்கு காணப்படவில்லை.


# மாநிலச் செய்திகள்

## பாரம்பரிய இசைக் கருவி - கோவா

- கோவா மாநிலத்தின் பாரம்பரிய இசைக் கருவியாக "குமோட்" என்ற கருவியை

கோவா மாநில அரசு விரைவில் அறிவிக்கவிருப்பதாக கோவாவின் கலை மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

- குமோட் என்பது ஒரு உள்நாட்டு மண் பானை ஆகும்.
- குமோட் என்பது விநாயகச் சதுர்த்தி திருவிழாவின் போது பரவலாக இசைக்கப்படும் ஒரு வகை தட்டும் கருவியாகும்.
- உடும்பின் தோலைப் பயன்படுத்தி இந்தக் கருவி தயாரிக்கப்படுவதால் வனத் துறை இந்தக் கருவியைத் தடை செய்துள்ளது. உடும்பு என்பது அழிந்துபோகும் உயர் அபாயத்திலுள்ள வகை உயிரினங்கள் என்பதால் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972-ன் அட்டவணை 1-ல் அது பட்டியலிடப்பட்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் இந்தப் பானை "கும்மேட்டா" என்று அழைக்கப்படுகிறது. இது நாட்டுப்புறக் கதை சொல்லுதலின் போது இசைக்கப்படுகிறது.



## K-SWIFT மென்பொருள் செயலி

- முதலீடு செய்வதற்கு விண்ணப்பித்த 30 நாட்களுக்குள் அனுமதி வழங்குதலை உறுதி செய்வதற்காக ஒரு நிகழ்நேர இயங்கமைப்பை கேரள மாநில முதல்வர் தொடங்கி வைத்துள்ளார்.
- K-SWIFT (K SWIFT/Kerala Single Window Interface for Fast, Transparent Clearances - விரைவான, வெளிப்படையான அனுமதி வழங்குதலுக்கான கேரள ஒற்றைச் சாளர இடைமுகம்) என்ற செயலி 2019 ஆம் ஆண்டின் ASCEND கேரளா என்ற நிகழ்ச்சியின் போது வெளியிடப்பட்டது.
- இது கேரள மாநிலத்தில் நிறுவனங்களைத் தொடங்க எதிர்பார்க்கின்றவர்களுக்கு அரசாங்க அனுமதியின் ஒப்புதலை விரைவாக மற்றும் எளிதாக வழங்குவதற்கான ஒரு மென்பொருள் செயலியாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## மத்திய நேரடி வரிகள் வாரியம் - தலைவர்

- இந்திய வருவாய்ப் பணி அதிகாரியான பிரமோத் சந்திர மோடி மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் (CBDT - Central Board of Direct Taxes) தலைவராகப் பொறுப்பேற்றார்.
- CBDT என்பது வருமான வரித் துறையின் கொள்கைகளை உருவாக்கும் ஒரு அமைப்பாகும்.
- இவர் 1982 ஆம் ஆண்டு வருவாய்ப் பணி அதிகாரியாக (வருமான வரி) தேர்ந்தெடுக்கப்பட்டார்.



- மக்களவைத் தேர்தலை முன்னிட்டு சுஷில் சந்திரா தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளதால், அவரது இடத்திற்கு பிரமோத் சந்திர மோடி நியமிக்கப்பட்டுள்ளார்.
- CBDT ஆனது ஒரு தலைவரையும் அதிகபட்சம் 6 உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.

## சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் கொரியக் குடியரசு – முன்னிலை கொள்கைக் குழுக்கள்

- 2018 ஆம் ஆண்டின் கொள்கைக் குழுவிற்கான குறியீட்டு அறிக்கையில் சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் கொரியக் குடியரசின் முன்னிலை கொள்கைக் குழுக்கள் என்ற பிரிவில் அரசியல் மற்றும் பொதுக் கொள்கைகளை உருவாக்கும் இந்து மையமானது 33-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் லாடர் நிறுவனத்தில் உள்ள கொள்கைக் குழுக்கள் மற்றும் மக்கள் சமுதாயத் திட்டம் என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின்படி, அதிக எண்ணிக்கையிலான கொள்கைக் குழுக்கள் அமெரிக்காவில் உள்ளன. இதற்கு அடுத்து இந்தியா (509), சீனா (507), ஜப்பான் (128)

மற்றும் தென் கொரியா (60) ஆகிய நாடுகள் உள்ளன.

- "தி இந்து" குழுமத்தின் ஒரு பகுதியான அரசியல் மற்றும் பொதுக் கொள்கைகளை உருவாக்கும் இந்து மையமானது அப்போதைய குடியரசுத் தலைவரான பிரணாப் முகர்ஜியினால் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### Countries with the Largest Number of Think Tanks

| RACK | COUNTRY | NUMBER OF THINK TANKS |
|---|---|---|
| 1 | United States | 1871 |
| 2 | India | 509 |
| 3 | China | 507 |
| 4 | United Kingdom | 321 |
| 5 | Argentina | 227 |
| 6 | Germany | 218 |
| 7 | Russia | 215 |
| 8 | France | 203 |
| 9 | Japan | 128 |
| 10 | Italy | 114 |

## உயர் நீதிமன்ற நீதிபதி – செந்தில் குமார் இராமமூர்த்தி

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று குடியரசுத் தலைவர் மதராஸ் உயர் நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக செந்தில் குமார் இராமமூர்த்தியை நியமித்து அறிவிக்கையை வெளியிட்டுள்ளார். இவர் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு கூடுதல் நீதிபதியாகப் பணியாற்றுவார்.
- 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று வழக்குரைஞர் செந்தில் குமார் இராமமூர்த்தியை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிப்பதற்கான பரிந்துரையானது இந்திய உச்ச நீதிமன்ற கொலிஜியத்தினால் அனுப்பப்பட்டது.
- இந்தப் பரிந்துரைக்கு 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 04 அன்று கொலிஜியம் தனது ஒப்புதலை வழங்கியது. ஆனால் மத்திய அரசினால் இவரது பெயர் திருப்பி அனுப்பப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## FIH வீரர்களுக்கான ஆண்டு விருதுகள்

- சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் (International Hockey Federation - FIH) வீரர்களுக்கான ஆண்டு விருதுகள் என்பது சர்வதேச ஹாக்கிப் போட்டிகளில் சிறந்து விளையாடும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர்களுக்கு வழங்கப்படும் வருடாந்திர விருதுகளாகும்.
- FIH வீரர்களுக்கான ஆண்டு விருதுகளானது 1998 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு,

அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

- 2001 ஆம் ஆண்டில் அந்த ஆண்டிற்கான சிறந்த இளம் ஹாக்கி வீரர்களுக்கு விருது வழங்குவதற்காக FIH இளம் வீரர் ஆண்டு விருது உருவாக்கப்பட்டது.
- 1998 ஆம் ஆண்டு முதல் எந்தவொரு இந்திய ஹாக்கி வீரரும் இந்த விருதினைப் பெற்றதில்லை.

***இந்த ஆண்டின் வெற்றியாளர்கள்***

- ஆண்டின் ஆண் வீரர் – வன் டோரென் (பெல்ஜியம்). தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக இவர் இந்த விருதைப் பெறுகிறார்.
- ஆண்டின் பெண் வீரர் – ஏவ டி கோடி (நெதர்லாந்து)
- ஆண்டின் கோல் கீப்பர்:
  - ✓ ஆண் – வின்சென்ட் வனாஸ்ச் (பெல்ஜியம்)
  - ✓ பெண் – மேடி ஹின்ச் (கிரேட் பிரிட்டன்)
- ஆண்டின் எழுச்சி வீரர்
  - ✓ ஆண் – ஆர்தர் டி ஸ்லோவர் (பெல்ஜியம்)
  - ✓ பெண் – லூசினா வின் டெர் ஹேடி (அர்ஜெண்டினா)

## மூத்தோருக்கான 83-வது தேசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் 2019

- 2019 ஆம் ஆண்டில் கௌஹாத்தியில் நடைபெற்ற யுனெக்ஸ் - சன்ரைஸின் மூத்தோருக்கான 83-வது தேசிய பேட்மிண்டன் (இறகுப் பந்து) சாம்பியன்ஷிப்பில் ஆண்களுக்கான ஒற்றையர் பட்டத்தை சவ்ரப் வெர்மா வென்றுள்ளார்.
- இறுதிப் போட்டியில், இவர் லக்சயா சென்னைத் தோற்கடித்தார். இது வெர்மாவின் மூன்றாவது தேசியப் பட்டமாகும்.
- இதற்குமுன், அர்ஜீன் எம் ஆர் மற்றும் சலோக் இராமச்சந்திரன் என்ற ஜோடியை பிரணவ் ஜெர்ரி சோப்ரா மற்றும் சிராக் ஷெட்டி என்ற ஜோடி வீழ்த்தி ஆண்களுக்கான இரட்டையர் பட்டத்தை வென்றது.

# இதரச் செய்திகள்

## தொடக்கக் கல்வி ஆசியா 2019

- இரண்டு நாள் நடைபெறும் தொடக்கக் கல்வி ஆசியா 2019 மாநாடானது இராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் உள்ள நகர மாளிகையில் நடைபெற்றது.
- இந்த நிகழ்ச்சியானது கல்வி தொடர்பான ஆராய்ச்சி, குழந்தைகளின் தொடக்க நிலைக் கல்வியின் மேம்பாட்டிற்கான கல்வி மற்றும் கொள்கைகள் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.
- “நமது குழந்தைகள், நமது எதிர் காலம்” என்பது இந்த நிகழ்ச்சியின் குறிக்கோளாகும்.
- இது ஜெய்ப்பூரின் அரச குடும்பத்தினரான இளவரசி தியா குமாரியினால் நடத்தப்பட்டது.

- - - - - - - - - - - - - - -